**வரையறுக்கப்பட்ட ஹிங்குரான சீனி தொழிற்சாலையின் 2019, 2020, 2021 மற்றும் 2022 வரையான மூன்று ஆண்டு காலப்பகுதிக்கான கொடுக்கல் வாங்கல்கள் அறிக்கை**

---

வரையறுக்கப்பட்ட ஹிங்குரான சீனி தொழிற்சாலையின் 2019, 2020, 2021 மற்றும் 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த நான்கு ஆண்டுகளுக்கான செயற்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் என்னால் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற தொழிற்சாலையின் செயற்பாட்டு நிலைமை தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

1.2 **நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக முகாமைத்துவத்தினதும் நிர்வகிக்கின்ற தரப்பினரதும் பொறுப்புக்கள்**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் சகல கணக்காய்வு செய்யப்படுகின்ற நிறுவனங்களினாலும் அந்த நிறுவனங்கள் தொடர்பான அந்த மற்றும் காலரீதியான நிதிக்ககூற்றுக்கள் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் தனது வருமானம், செலவினம், சொத்துக்கள், மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய பிரகாரம் ஏடுகள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லல் அவசியமாகின்றது.

அந்தச் சட்டத்தின் 16(2) ஆம் பிரிவின் பிரகாரம் ஒவ்வொரு கணக்காய்வு செய்யப்படுகின்ற நிறுவனம் தொடர்பான வருடாந்த நிதிக்கூற்றுக்கள், விதிகள் மூலம் காண்பிக்ககப்படக்கூடிய பிரகாரம் கால எல்லையில் அந்த நிறுவனங்களின் வருடாந்த செயலாற்றல் அறிக்கையுடன் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரால் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

அந்தச் சட்டத்தின் 38(1)(ஈ) பிரிவின் பிரகாரம் வருடாந்த அறிக்கை மற்றும் ஏனைய நிதிக்கூற்றுக்கள் தேவையான நேர காலத்தில் தயாரிப்பதற்கு முடியுமென உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அதற்கு மேலதிகமாக கணக்காய்வு செய்யப்படுகின்ற நிறுவனத்திற்குரிய ஆண்டறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிப்பிதற்கு பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் கண்காணித்தல் வேண்டும்.

**2. ஏனைய சட்டரீதியான மற்றும் ஒழுங்குபடுத்தல் தொடர்பான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டம் மற்றும் 2007 இன் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தில் கீழே குறிப்பிடப்படுகின்ற தேவைகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளது.

2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 150(1) பிரிவின் படி ஐந்தொகை திகதியில் இருந்து ஆறு மாத காலத்திற்குள் நிதிக் கூற்றுக்களை தயாரிப்பதற்காக பொறுப்பு வாய்ந்த நபர்களினால் உறுதிப்படுத்துதல் வேண்டும்.

## 2.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 என்ற பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பிரிவு மற்றும் 2021 நவம்பர் 16 ஆந் திகதி இலக்கம் 01/2021 என்ற பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.6 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் நிதிக்கூற்றுக்கள் மற்றும் வரைவு அறிக்கை சமர்ப்பிக்க வேண்டியிருந்த போதிலும் 2016 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரையான 07 வருடங்களுக்குரிய நிதிக்கூற்றுக்கள் மற்றும் வரைவு ஆண்டறிக்கை என்பன இந்த அறிக்கை திகதி வரையிலும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்பிக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த அறிக்கைகளுக்குரிய நிதிக்கூற்றுக்கள் இதுவரை தமது அமைச்சிற்கு சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன் அந்தததகவல்களை பெற்றுக்கொள்வதற்காக வ/ப ஹிங்குரான சீனித் தொழிற்சாலை முன்னாள் பொது முகாமையாளருக்கு அதற்குரிய தகவல்களை வழங்குமாறு கோரி 2022.09.27 ஆந் திகதி கடிதம் ஒன்றின் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் குறித்துரைத்த காலத்தில் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பித்தல் வேண்டும். |

## 2.2 தொடர்ச்சியான இருப்பு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 1993 ஆம் ஆண்டில் தனியார் மயப்படுத்தலின் கீழ் இந்த நிறுவனம் தோல்வியடைந்தமையினால் மீண்டும் 1997 ஆம் ஆண்டின் போது அரசாங்கத்திற்கு கையேற்று 1998 ஆம் ஆண்டு முதல் எந்தவொரு உற்பத்தி செயற்பாடும் மேற்கொள்ளப்படாமையால் 2001 ஆம் ஆண்டின் போது சகல ஊழியர்களுக்கும் இழப்பீடு செலுத்தி அவர்களின் சேவை முடிவுறுத்தப்பட்டிருந்ததுடன் இந்த தொழிற்சாலைகளுக்குரிய காணிகளில் ஒரு பகுதி மற்றும் கட்டிடங்கள் 30 வருட குத்தகை அடிப்படையில் வழங்கி கல்ஓயா பெருந்தோட்ட தனியார் கம்பனி ஸ்தாபிக்கப்பட்டிருந்தது. நிறுவனத்தின் சொத்துக்கள் மற்றும் நிர்வாக நடவடிக்கைகளுக்காக 2016 ஆம் ஆண்டின் போது 09 ஊழியர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன் தற்போது வரையிலும் ஒரு பொது முகாமையாளர் தற்காலிகமாக நியமிக்கப்பட்ட போதும் அவரால் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் இந்த தொழிற்சாலை பெயரளவில் காணப்படுகின்ற நிறுவனமாக இருந்தமையால் இந்த நிறுவனத்தை தொடர்ச்சியாக நடத்துதல் நிச்சயமற்ற நிலமையில் காணப்பட்டது. | தற்போது இந்த நிறுவனம் பெயரளவில் காணப்பட்ட நிறுவனமாக இருந்தமையினால் அமைச்சரவை குறிப்பின் மூலம் கலைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | தொழிற்சாலை சொத்துக்கள் ஓய்வு பெறச் செய்தல் மற்றும் கலைக்கும் நடவடிக்கைகளை பூர்த்தி செய்வதற்கு விரைவாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2.3 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2019, 2020, 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளின் போது கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள், காசேடு, வங்கி இணக்க கூற்றுக்கள், பதவியணியினர் தொடர்பான தகவல்கள் மற்றும் சொத்துக்கள் மெய்மையாய்வு அறிக்கை மற்றும் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் தகவல்கள், மீதி உறுதிப்படுத்தல்கள், விவசாய மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சின் செயலாளரிடம் இருந்து கோரப்பட்டிருந்த போதும் அந்த தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | வ/ப ஹிங்குராணை சீனித்தொழிற்சாலையின் முன்னாள் பொது முகாமையாளர் திரு. எம்.எம்.எம். இப்திகார் என்பவருக்கு தகவல்களை வழங்குமாறு கோரி 2022.12.28 ஆம் திகதி கடிதம் ஒன்றின் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. | கணக்காய்விற்காக தேவையான ஆவணங்கள் மற்றும் ஏடுகளை வழங்குவதற்கு பொறுப்புவாய்ந்த தரப்பினரால் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் இருப்பு

தொழிற்சாலையினால் இறுதி தடவையாக தயாரிக்கப்பட்டு கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களில் காணப்படுகின்ற சொத்துக்கள், பொறுப்புக்கள், வருமானம் மற்றும் செலவினம் தொடர்பான விபரம் காண்பிக்கப்படுகின்றது.

| விடயம் | தொகை ரூபா |
|---|---|
| நடைமுறையல்லாச் சொத்துக்கள் | 153,005,563 |
| நடைமுறைச் சொத்துக்கள் | 147,279,541 |
| மொத்தச் சொத்துக்கள் | 300,285,104 |
| பொறுப்புக்கள் | |
| நடைமுறைப் பொறுப்புக்கள் | 83,806,919 |
| நடைமுறையல்லாப் பொறுப்புக்கள் | 1,661,688,916 |
| மொத்தப் பொறுப்புக்கள் | 1,745,495,835 |
| தேறிய சொத்துக்கள் / விடயங்கள் | (1,445,210,731) |
| மொத்த பொறுப்புக்கள் மற்றும் உரிமையாண்மை | 300,285,104 |
| மொத்த வருமானம் | 11,702,140 |
| மொத்த செலவினம் | 10,193,734 |
| மிகை | 1,508,406 |

**3.2 செயலாற்றல்.**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 1998 ஆம் ஆண்டில் இருந்து எந்தவொரு உற்பத்தி செயற்பாடும் மேற்கொள்ளப்படாத இந்த தொழிற்சாலையின் ஐந்தொகையில் காண்பிக்கப்படுகின்ற கிரயம் ரூபா 183 மில்லியன் ஆன காணி, கட்டிடம், இயந்திரம் மற்றும் உபகரணங்கள் போன்ற சொத்துக்கள் விளைவற்றுக் காணப்படுகின்றமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | ஹிங்குரான சீனித்தொழிற்சாலையின் சொத்துக்கள் ஓய்வு பெறச் செய்தல் மற்றும் கலைப்பத்ற்கான நடவடிக்கைகள் தேவையாக இருந்தமையால் அதற்காக அமைச்சரவை குறிப்பின் வரைவு தயாரித்து பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன் அது தொடர்பாக மிகுதி நடவடிக்கை எடுக்கப்படும். | தொழிற்சாலையில் காணப்படுகின்ற சொத்துக்களில் இருந்து உரிய பயன்பாட்டை பெற்றுக்கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகள் விரைவாக எடுக்கப்படல் வேண்டும். |

**3.3 முகாமைத்துவ செயற்பாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | தொழிற்சாலைகளுக்குரிய ஹெக்டெயர் 277.73 ஆன காணி மற்றும் அதற்குரிய தொழிற்சாலை கட்டிடங்கள் 30 வருட காலத்திற்காக குத்தகை அடிப்படையில் வரையறுக்கப்பட்ட கல்ஓய (தனியார்) கம்பனிக்கு 2007 ஆம் ஆண்டின் போது வழங்கப்பட்டிருந்த போதிலும் 2009 மார்ச் 26 ஆந் திகதிய இலக்கம் அமப 09//0398/329/003 என்ற அமைச்சரவை தீர்மானத்தின் படி வாடகை உடன்படிக்கை தயாரித்து அதற்காக சட்டமா அதிபரின் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இது தொடர்பாக காணி ஆணையாளரின் 2021.02.15 ஆந் திகதிய இலக்கம் 4/10/63593 என்ற கடிதம் மூலம் காணிகளின் நிர்வாகம் கல்ஓய பெருந்தோட்ட (தனியார்) கம்பனிக்கு கையளிக்கப்பட்டுள்ளது. | அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் முறையான நடவடிக்கை தயாரித்து சட்டமா அதிபரின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 20 வருடங்களுக்கு அளவிலான காலத்திற்கு முன்னர் வாடகை நடவடிக்கையின் மூலம் 4493 விவசாயிகளுக்கு இடையே 2.5 ஏக்கர் வீதம் 11,232 ஏக்கர் வழங்கப்பட்டிருந்த போதிலும் அதற்கான வாடகைப் பணம் அறவிடப்படாது இருந்ததுடன் அந்த வாடகை உடன்படிக்கையின் காலமும் காலாவதியாகி இருந்தது. இந்த காணிகளை மீண்டும் பெற்றுக்கொள்வதற்கு அல்லது புதிதாக வாடகை உடன்படிக்கை கைச்சாத்திட்டு வாடகை அறவிடுவதற்கோ அல்லது வரையறுக்கப்பட்ட கல்ஓய (தனியார்) கம்பனிக்கு கையளிப்பதற்கோ முறையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | காணி ஆணையாளர் நாயகம் மற்றும் பொது திறைசேரி மற்றும் கலந்துரையாடலுக்கு உட்பட்ட முத்தரப்பினரின் உடன்படிக்கை தயாரித்து அது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ள காணிகளுக்காக வாடகை உடன்படிக்கை தயாரித்து வாடகை பணம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | தொழிற்சாலைகளுக்கு உரியதாக காணப்படுகின்ற சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக 20 வருடங்களுக்கு மேற்பட்ட காலத்தில் இருந்து பௌதீக மெய்மையாய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளாமையால் சொத்துக்களின் இருப்பு மற்றும் சரியான தன்மையினை கணக்காய்வின் போது உறுதிப்படுத்துவதற்கு முடியாதிருந்தது. | வ/ப ஹிங்குரான சீனிக் கம்பனியின் சொத்துக்கள் ஓய்வு பெறச் செய்தல் மற்றும் கலைக்கும் நடவடிக்கைகளின் போது சொத்துக்கள் தொடர்பாக பௌதீக மெய்மையார்வு மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. வ/ப ஹிங்குரான சீனித்தொழிற்சாலையின் நாரஹேன்பிட்ட கட்டிடத்தில் உள்ள ஆதனங்கள், சொத்துக்கள் முறையாக கையேற்பதற்கு நியமிக்கப்பட்ட குழுவின் மூலம் தற்போது இந்த கட்டித்தில் அமைந்துள்ள ஆதனங்கள், உபகரணங்கள், இயந்திரங்கள், பொறிகள் மற்றும் கோவைகளை இனங்கண்டு பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. வ/ப ஹிங்குரான சீனித்தொழிற்சாலைற்சாலைக்குச் சொந்தமான வாகனங்களின் (மோட்டார் சைக்கிள்கள் மற்றும் மோட்டார் வாகனங்கள்) சொத்துப் பதிவுச் சான்றிதழ் மற்றும் அதற்குரிய சாவிகள் அமைச்சிற்கு கையளிக்குமாறு 2022.09.26 ஆந் திகதிய கடிதம் மூலம் வ/ப ஹிங்குரான சீனித் தொழிற்சாலைற்சாலை கம்பனியின் முன்னாள் பொது முகாமையாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | பௌதீக மெய்மையாய்வு மேற்கொண்டு அந்த சொத்துக்களின் இருப்பு மற்றும் சரியான தன்மையை உறுதிப்படுத்துதல் மற்றும் அந்த அறிக்கையை கணக்காய்விற்கு வழங்குவதற்கு தாமதம் இன்றி நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | தொழிற்சாலைக்குரிய 273 உத்தியோகபூர்வ இல்லங்களில் 91 இல்லங்கள் அனுமதியற்ற நபர்களினால் குடியிருந்து வருவதுடன் அவர்களை அகற்றுவதற்கு சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே ஏனைய வீடுகளில் இருந்தும் வாடகைப் பணம் அறவிடுதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இது தொடர்பாக காணி ஆணையாளர் நாயகமே நடவடிக்கை எடுக்க வேண்டியுள்ளது. | உத்தியோகபூர்வ இல்லங்களில் குடியிருக்கின்ற அனுமதியற்ற நபர்கள் தொடர்பாக சட்டரீதியான நடவடிக்கைகளை எடுத்தல் மற்றும் முறையான உடன்படிக்கையை தயாரித்து வாடகைப் பணம் அறவிடுவதற்கு |

| | | | |
|---|---|---|---|
| | | | நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | நாரஹேன்பிட்ட அலுவலகத்தில் போத்தல் உற்பத்தி கூடத்திற்குரிய இயந்திர பொறிமுறைகள் மற்றும் உபகரணங்கள், 03 மோட்டார் சைக்கிள்கள் மற்றும் ஒரு மோட்டார் வாகனம் என்பன ஹிங்குரான தொழிற்சாலை வளவில் காணப்படுகின்ற இயந்திர உபகரணங்களை உள்ளடக்கிய சொத்துக்களும் 1997 ஆம் ஆண்டில் இருந்து பயனற்று காணப்பட்டமையினால் பயன்படுத்தக்கூடிய முடியாத நிலைமைக்கு உட்படுத்தப்பட்டிருந்ததுடன் அந்த சொத்துக்களை விற்றுத்தீர்ப்பதற்கு 2023 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஹிங்குரான சீனித் தொழிற்சாலைக்குரிய அசையும் மற்றும் அசையுறாத ஆதனங்களை உரிய பிரகாரம் இணங்கண்டு முறையாக விற்று தீர்ப்பதற்கும் அல்லது முக்கிய பதிவேடுகளை தமது பொறுப்பில் எடுப்பதற்கும் பொது திறைசேரியின் ஒத்துழைப்பை பெற்று கலைக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது 2022.04.29 ஆந் திகதி நியமிக்கப்பட்ட குழுவின் மூலம் நாயரயம்பிட்ட கட்டிடத்தில் உள்ள அசையும் மற்றும் அசையுறாத ஆதனங்களை கையேற்கும் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. | பயனற்று காணப்படுகின்ற சொத்துக்களை விற்று தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஊ) | தொழிற்சாலையில் காணப்படுகின்ற சகல சொத்துக்கள் தொடர்பாகவும் அரசாங்கத்தின் மதிப்பீட்டு அறிக்கையை பெற்றுக்கொள்ளுமாறு 2018 பெப்ரவரி 27 ஆந் திகதி கைத்தொழில் மற்றும் வணிக அலுவல்கள் அமைச்சின் செயலாளரால் முன்னாள் பொது முகாமையாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன் 2017 பெப்ரவரி மாதம் நடைபெற்ற பொது முயற்சிகள் குழு தீர்மானம் மற்றும் 2019 ஆகஸ்ட் 27 ஆந் திகதிய இலக்கம் அமப/1972/117/058 என்ற அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் தொழிற்சாலையை கலைப்பதற்கும் அதற்கான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களை இனங்கண்டு அவற்றை தீர்த்து வைப்பதற்கும் தேவையான நடவடிக்கைகள் விரைவுபடுத்தப்பட வேண்டும் என கட்டளை மற்றும் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த போதிலும் 2023 ஆம் ஆண்டின் இறுதி வரையும் அந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இது தொடர்பாக அமைச்சரவை குறிப்பின் வரைவு தயாரித்து பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன் அது தொடர்பாக மிகுதி நடவடிக்கைகள் எடுக்கப்படும். | தொழிற்சாலையின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களை தீர்த்து வைத்து கலைக்கும் நடவடிக்கைகளை விரைவுபடுத்தி முடிவுறுத்துதல் வேண்டும். |